Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | :CC.196/2013 | | |
| Witness for Prosecution | : PW1 | | |
| Name | ராணி | Taluk : | |
| Father's / Husband Name | வடிவேல் | Calling : | |
| Village | தொகரப்பள்ளி, பிள்ளகொட்டாய் | Age : | 66 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 10.03.2026

1,2 எதிரிகள் ஆஜர்.

**<u>மனுவின் பேரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

எனக்கு எழுதபடிக்க தெரியுமா என்றால் தெரியும். என்ன படித்துள்ளீர்கள் என்றால் 9 ஆம் வகுப்பு படித்துள்ளேன். புகாரை எழுதியது யார் என்றால் நான் தான் எழுதினேன். அன்றைய தினம் நிகழ்ச்சிக்கு சென்றதாக சொன்னதில் யார் யார் சென்றீர்கள் என்றால் நான், என் தங்கை, என் கணவர். தொகரப்பள்ளிக்கும், எங்கள் ஊரான பிள்ளக்கொட்டாய்க்கும் எவ்வளவு தூரம் என்றால் 2 கி.மீ. நான் வந்தது டவுன் பேருந்து என்றால் சரிதான். கிருஷ்ணகிரியில் இருந்து மத்தூர் செல்லும் பேருந்து ஆகும். தொகரபபள்ளியில் இருந்துமத்தூர் செல்லும் வழியில் தான் பிள்ளகொட்டாய் உள்ளது என்றால் சரிதான். எங்கள் ஊர் நெடுஞ்சாலையின் ஒட்டி உள்ளது என்றால் சரிதான் அங்கும் பேருந்து நிறுத்தப்படுகிறது என்றால் சரிதான்.

எங்கள் ஊருக்கு திரும்ப வரும்போது யார் யார் வந்தீர்கள் என்றால் நானும் என் தங்கை வளர்மதியும் வந்தோம். என் கணவர் எங்களுக்கு முன்பாக வந்து வாகனத்தை எடுத்து எங்களை அழைத்து செல்ல வந்தார். ஏன் பிள்ளக்கொட்டாயில் இறங்காமல் தொகரப்பள்ளியில் இறங்கினீர்கள் என்றால் என் தங்கை வளர்மதியின் வீடு தொகரப்பள்ளி கூட்ரோட்டில் உள்ளது. அவரை வீட்டில் விட்டுவர வேண்டி அங்கு இறங்கினோம். என் தங்கை வளர்மதியை வீட்டில் விட்டு விட்டு என் கணவர் வருவதற்குள் நிறைய ஆட்கள்

இருந்ததால் அவர்களுடன் நடந்து சென்றேன். உடன் நடந்துவந்தவர்கள் யார் என்றால் பக்கத்து ஊரை சேர்ந்தவர்கள் யார் என்று தெரியாது. என் சங்கிலியை அறுத்து செல்ல வாகனத்தில் வந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது, பல்சரில் வந்தார்கள். பல்சர் வாகனம் என்று யார் சொல்லி தெரியும் என்றால் பக்கத்தில் உள்ளவர்கள் சொல்லி தெரியும்.

பல்சர் வாகனத்தில் வந்தார்கள் என்று எப்படி தெரியும் என்றால் பல்சர் வாகனத்தில் வந்தவர்கள் வேகமாக சென்றார்கள் என்று அங்கு இருந்தவர்கள் சொல்லி தெரியும். தாலி செயினில் மாங்கல்ய டாலர் இருந்தா என்றால் இருந்தது. 5 1/2 பவுன் தாலியில் என்ன என்ன இருந்தது என்றால் தாலி மற்றும் சையின் இருந்தது. புகாரில் தாலியுடன் செயின் இருந்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். வண்டியில் வந்தவர்கள் எந்த திசையில் இருந்து வந்தார்கள் என்றால் நான் சென்ற திசையின் எதிர் திசையில் கிருஷ்ணகிரியில் இருந்து ஊத்தங்கரை நோக்கி வந்தார்கள்.

எனக்கு செயின் பறிக்கும்போது காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. செயின் தற்போது எடுத்து வந்துள்ளீர்களா என்றால் இல்லை. காணாமல் போன செயின் வாங்கியதற்கான ரசீது உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. திருடப்பட்ட நகையை நீதிமன்றத்தில் எவ்வாறு பெற்று சென்றீர்கள் என்றால் சையின் 3 துண்டுகளாக அறுந்த நிலையில் வாங்கி சென்றேன். நீதிமன்றத்தில் இருந்து 3 துண்டுகளாக வாங்கி சென்றேன் என்றால் சரிதான். 3 துண்டுகள் எவ்வளவு இருக்கும் என்றால் சுமார் 3 1/2 பவுன் இருக்கும். என் கணவர் எவ்வளவு நேரம் கழித்து வந்தார் என்றால் 10 நிமிடத்தில் வந்துவிட்டார். நான் அப்போது என்ன செய்தேன் என்றால் நான் அங்கே தான் இருந்தேன். பின்பு வீட்டிற்கு சென்றுவிட்டு மறுநாள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

சம்பவம் நடைபெற்ற சிறிது நேரத்தில் என் கணவர் மட்டும் இருந்தார் என்றால் என் கணவர் மற்றும் என் உறவினர் ரவி இருந்தார்கள். அன்றைய தினம் போனில் போலீசாரிடம் தகவல் கொடுத்தோமா என்றால் இல்லை, மறுநாள் தான் புகார் கொடுத்தோம். மறுநாள் காலை 11.00 மணிக்கு தாமதமாக புகார் கொடுத்தற்கான காரணம் என்ன என்றால் அன்றைய தினம் இருட்டிவிட்டதால் மறுநாள் கொடுத்தோம். புகாரில் எனக்கு பின்னால் இருசக்கர வாகனம் வந்தவர்கள் தான் சங்கிலியை பறித்ததாக கூறியுள்ளீர்கள் என்றால் சரிதான். முதல் விசாரணையில் எதிர் திசையில் வந்தவர்கள் தான்

பறித்தார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் எதிர் திசையில் தான் வந்தார்கள் என்னை கடந்து சென்று வாகனம் நிறுத்தி வாகனத்தில் பின்னால் அமர்ந்து இருந்தவர் இறங்கி வந்து என் கழுத்து தாலி சங்கிலியை பிடுங்கி சென்றார்.

இது போன்ற விவரத்தை புகாரில் சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை. முதல் விசாரணையில் என்னுடைய கோதுமை செயினை பறித்து சென்றதாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சங்கிலியில் கோதுமை செயின், தாலி செயின் போன்ற வகைகள் உள்ளன என்றால் சரிதான். புகாரில் தாலி செயின் முதல் விசாரணையில் கோதுமை செயின் என்று இரு செயின்களை கூறினேன் என்றால் சரிதான். என் கணவர் வெளியூறுக்கு சென்று இருந்ததால் புகாரை மறுநாள் கொடுத்ததாக புகாரில் கூறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான்.

செயின் காணாமல்போனதாக நான் கொடுத்த புகாருக்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் பெற்று சென்ற நகைக்கும், எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. புகாரில் கொடுத்த நகையும் நீதிமன்றத்தில் பெற்று சென்ற நகையும் வெவ்வேறு என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்ற இடம் கிருஷ்ணகிரி – திருவண்ணாமலை பைபாஸ் சாலை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் போக்குவரத்து அதிகம் உள்ள சாலை என்றால் சரிதான். சம்பவ நடந்த இடத்தில் வீடுகள் உள்ளது என்றால் வீடுகள் இல்லை கொஞ்சம் தள்ளி உள்ளது. 20 அடி தூரத்தில் வீடுகள் இருந்தன என்றால் சரிதான்.

நான் சொன்னது போல் சம்பவம் நடந்து இருந்தால் அக்கம் பக்கம் உள்ளவர்கள் பார்த்திருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடைபெறாததால் தான் அங்கு யாரும் இல்லை என்றால் சரியல்ல. உண்மையில் நகை காணாமல் போயிருந்தால் அன்றைய தினமே புகார் கொடுத்திருப்பேன் என்றால் இருட்டாக இருந்ததால் மறுநாள் கொடுத்தேன். பொய்யான சங்கதிகளை கூறி வழக்கு தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/–D.Saravanan, B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)

Judicial Form No.53

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, POCHAMPALLI.

| | | | |
|---|---|---|---|
| Case No. | CC.196/2013 | | |
| Witness for Prosecution | : PW3 | | |
| Name | ரவி | Taluk | : |
| Father's / Husband Name | கிருஷ்ணன் | Calling | : |
| Village | தொகரப்பள்ளி, பிள்ளகொட்டாய் | Age | : 41 |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 10.03.2026

1,2 எதிரிகள் ஆஜர்.

**<u>மனுவின் பேரில் மீண்டும் திரும்ப அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். புகார்தாரர் என் சித்தி என்றால் சரிதான். நான் செல்லும்போது அங்கு எத்தனை பேர் இருந்தார்கள் என்றால் அங்கு 10 பேர் இருந்தார்கள். சம்பவம் நடந்தது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் என் சித்தி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் இல்லை.

"Taken down by me/before me in open Court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct".

Sd/-D.Saravanan, B.A.,B.L.,
District Munsif Cum Judicial
Magistrate, Pochampalli (FAC)